


31ஆவது ஆண்டில்

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 31 பாலம்: 23 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | DECEMBER 01, 2021

# சிம்மாசனப் பிரசங்கமும் ஆரோக்கியமான எதிர்காலமும்

கனடிய மத்திய அரசின் 44ஆவது நாடாளுமன்ற அமர்வுகள் லிபரல் கட்சி அரசின் சிம்மாசனப் பிரசங்கத்துடன் 2021 நொவெம்பர் 23ஆம் திகதி ஆரம்பமானது. லிபரல் கட்சி அரசின் திட்டங்களை இராணியின் பிரதிநிதியும் ஆளுநருமான மேன்மை தங்கிய Mary Simon அவர்கள் மேற்சபையில் வாசித்தார்.

கனடிய நாடாளுமன்றக் கட்டடம் தற்போது புனரமைப்புச் செய்யப்படுவதால் மேற்சபையின் நிகழ்வுகள் தற்காலிகமாக அரச மாநாட்டு மையம் (Government Conference Centre) மண்டபத்தில் நடைபெறுகிறது. கனடாவின் முதலாவது முதற்குடி மக்களைப் பிரதிநிதித்துப்படுத்தும் ஆளுநர் மேன்மை தங்கிய Mary Simon அவர்கள் முதற் தடவையாகச் சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். அவர் முதற்குடி மக்களின் மொழிகளில் ஒன்றான Inuktitutஇல் தனது பேச்சை ஆரம்பித்து தொடர்ந்து ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் நிகழ்த்தினார். இடையிடையே Inuktitut மொழியிலும் பேசினார்.

இச்சிம்மாசனப் பிரசங்கம் பெரும்பாலும் லிபரல் கட்சி தனது தேர்தல் பிரசார காலத்தில் அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்ற உறுதி அளிப்பதாக இருந்தது. இந்தச் சிம்மாசனப் பிரசங்கத்தில் சுகாதாரம், பொருளாதாரம், காலநிலை, பொதுப் பாதுகாப்பு, பன்முகத்தன்மை (diversity), நல்லிணக்கம் (reconciliation) மற்றும் வெளியுறவுக் கொள்கை ஆகிய ஏழு முக்கிய பிரிவுகள் உள்ளடக்கப் பட்டிருந்தன.

மேற்சபை நிகழ்வுகள் கனடிய Inuit



முதற்குடி மக்களின் பாரம்பரியமான எண்ணைத்தாழி (Qulliq) விளக்குகேற்றலுடன் ஆரம்பமானது. இந்த எண்ணைத்தாழி விளக்கேற்றுதல் ஆர்டிக் வடதுருவப் பகுதிகளில் வாழும் முதற்குடி மக்களின் 3,000 ஆண்டுகளுக்கு மேலான பாரம்பரியம் ஆகும்.



மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை வாழ்த்தியதுடன் தனது உரையை ஆரம்பித்த ஆளுநர் “நாங்கள் அல்கோன்குயின் அனிஷினாபே (Algonquin Anishinabe) இனத்தவரின் வழங்கப்படாத பிரதேசத்தில் கூடியுள்ளோம் என்பதை உறுதி செய்கிறேன். அத்துடன் இது ஒர் அடையாளத்திற்காகக் கூறப்படும் வசனம் அல்ல. இது எமது உண்மையான வரலாறு. ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தமது தொகுதியில் நமது சரித்திரத்தின் உண்மையை அறிய வேண்டும். தமது தொகுதியில் வாழ்ந்த Inuit, Metis மற்றும் முதற்குடி மக்களின் வரலாற்றை அறிய வேண்டும். ஒவ்வொரு சமூகமும் தனித்தனியாக இருந்தாலும் நாம் அனைவரும் நல்லிணக்கத்தை நோக்கி முன்னேறுவதற்கான ஒரு வழியைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

கடந்த கால அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் நடவடிக்கைகள் முதற்குடி மக்களை எவ்வாறு சீரழித்துள்ளன என்பதையும் இன்னும் அவர்களைத் தொடர்ந்து பாதிக்கின்றன என்பதையும் குடியிருப்புப் பள்ளி அமைப்பில் இறந்த குழந்தைகளின் அடையாளம் தெரியாத கல்லறைகளின் கண்டுபிடிப்புக் காட்டுகிறது. இக்கண்டுபிடிப்புகள் ஆழமான காயங்களைத் திறக்கின்றன. எமக்கு ஆழ்ந்த வலி இருந்தபோதும் நம்பிக்கை இருக்கிறது.

கனடியர் எவ்வாறு நல்லிணக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என நான் ஏற்கனவே பார்த்திருக்கிறேன். முதற்குடி மக்கள் தமது வரலாறு, கதைகள், கலாசாரம் மற்றும் மொழியை நடவடிக்கை மூலம் மீட்டெடுக்கின்றனர். முதற்குடி அல்லாத ஏனைய கனடியர் கனடாவின் கடந்த காலத்தின் தாக்கத்தையும், முதற்குடி மக்களின் தலைமுறைகள் அனுபவித்த வலியையும் புரிந்துகொண்டு ஏற்றுக் கொள்கின்றனர். நாம் எல்லோரும் இணைந்து நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிக்கிறோம். நாம் சுமக்கும் பழியை (Guilt) செயலாக மாற்றி நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எங்கள் எல்லோருடைய கூட்டு ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மீதான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். காலநிலை மாற்றத்தைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும்.

நமது பூமி ஆபத்தில் உள்ளது. ஆர்டிக் வடதுருவப் பகுதி வெப்பமாதலில் இருந்து இயற்கைப் பேரழிவுகள் அதிகரித்து வருகிறது. எமது நிலத்திற்கும் எமது மக்களுக்கும் உதவி தேவைப்படுகிறது. எமது பேச்சைச் செயற்பாட்டிற்கு மாற்ற வேண்டும். நாங்கள் இனியும் பொறுத்திருக்க முடியாது. எங்கெங்கு மாற்றங்களைச் செய்ய முடியுமோ அங்கங்கு உடனடியாகச் செயற்பட வேண்டும்.

குடியிருப்புப் பள்ளிகளின் துக்கம் மற்றும் வலி தொடக்கம் இயற்கைப் பேரழிவால் ஏற்பட்ட பயம் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்றுநோயால் ஏற்பட்ட ஆழமான வடுக்கள்வரை இந்த ஆண்டு நம் அனைவருக்கும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கனடா முழுவதும் உள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் குறிப்பாகச்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)




























# சிம்மாசனப்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

சுகாதார பராமரிப்பில் உள்ளவர்களுக்கும், எங்களைப் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் தொற்று நோய்களின் போது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலத்தைப் போலவே மனநல ஆரோக்கியத்திலும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதை இந்தத் தொற்று நோய்ப் பரவல் நமக்கு எடுத்துக் காட்டு கிறது. ஏனெனில் இவை இரண்டும் பிரிக்க முடியாதவை. நீங்கள் கனடாவின் இந்த 44ஆவது நாடாளுமன்றத்தை ஆரம்பித்து, இத்தொற்று நோயின் பாதிப்பிலிருந்து நாங்கள் மீளும்போது இந்நாட்டில் உள்ள முதற்குடி மக்களுக்கும் மற்றும் முதற்குடி மக்கள் அல்லாதோருக்கும் இடையே மிகச் சிறந்த உறவை உருவாக்குமாறும், அங்கு நடைபெறும் விவாதங்களை உறுதியான முடிவுகளாக மாற்றுமாறும் கேட்டுக் கொள்கிறேன். ஒருவருக்கு ஒருவர் கூறுவதை அவதானித்துக் கேளுங்கள். ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைத்துச் செயற்படுங்கள். இந்நாட்டை உருவாக்கி வடிவமைத்த பல மொழிகளைப் பேசும் மக்களின் குரல்களையும் கேளுங்கள்.

கடினமான கேள்விகளை எதிர்கொள்வது எப்பொழுதும் எளிதாகவோ அல்லது வசதியாகவோ இருக்காது. அதற்கு மன உறுதி (Conviction) தேவை. இது அவசியமானது. இதன் விளைவு உங்களுக்கும் எனக்கும் எமது குழந்தைகளுக்கும் ஒரு நிலையான (sustainable) ஒன்றுபட்ட கனடாவாக இருக்கும்" என்றார்.



ஆளுநர் தனது சிம்மாசனப் பிரசங்கத்தைத் தொடருகையில் "இந்த அரசாங்கத்தின் முக்கியமானதும் முதலாவதுமான திட்டம் கோவிட்-19 பெருந்தொற்று நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது இதற்கான மிகச் சிறந்தவழி தடுப்பூசி பெறுதல்.

ஏற்கனவே மத்திய அரசு, மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் தொழில் புரியும் எல்லோரும், கனடாவிற்குள் விமானம், தொடருந்து மற்றும் கப்பல் மூலம் பயணம் செய்யும் பயணிகள் எல்லோரும் தடுப்பூசிகள் பெற்றிருப்பதைக் கட்டாயமாக்கியுள்ளது. அத்துடன் கனடாவிற்குள்ளும் மற்றும் சர்வதேச பிரயாணங்களின் போதும் பாவிக்கப்படக்கூடிய ஒரு பொதுவான தடுப்பூசி பெற்றதற்கான ஆதாரத்தை உறுதிப்படுத்தும் முறையையும் அரசு அமல்படுத்தியுள்ளது. அத்துடன் 5 முதல் 12 வயது வரையிலான சிறுவர்களுக்கான தடுப்பூசி வழங்கலையும் அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. பொதுமக்களுக்குப் பாவிப்பதற்காக கோவிட்-19 தொற்றுநோய்க்கான மூன்றாவது தடுப்பூசி ஊக்கிகளையும் (boosters) அரசு பெற்றுக் கொள்ளுவதற்குத் தயாராக உள்ளது. இவற்றுடன் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் கனடிய அரசு உறுதுணையாக இருக்கிறது.

கனடியர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை வழங்க மாகாண அரசுகள் மற்றும் பிரதேசங்களின் அரசுகளுடன் இணைந்து செயற்பட மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கு நாம் செய்யக் கூடிய மிகச் சிறந்த விடயம் கோவிட்-19 தொற்றுநோயை முடிவிற்குக் கொண்டு வருவதுதான். அதற்குப் பின்னர் நாம் எல்லோரும் ஒன்றாக உழைத்து எமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். நாடு முழுவதும் முடங்கலை ஏற்படுத்தி மக்களை வீட்டிற்குள் இருக்கச் செய்த போது அரசாங்கம் கனடிய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு அவசியமான முதலீடுகளைச் செய்து குடும்பங்களுக்கு வாடகை செலுத்த உதவியும் சிறு நிறுவனங்கள் மூடப்படாமல் தொடரவும் வழி செய்தது.

இப்போது உலகத்திலேயே மிகவும் வெற்றிகரமாக கனடா முழுவதும் தடுப்பூசி பிரசாரங்களைச் செய்து பெருமளவு மக்களுக்குத் தடுப்பூசி வழங்கியதன் மூலம் கனடாவின் வேலைவாய்ப்புகளைப் பெருந்தொற்று நோய்க்கு முந்தைய நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. இப்போது மத்திய அரசு குறிப்பிட்ட சில தேவைகளுக்கு மட்டும் உதவி வழங்குவதுடன் அரசின் செலவினங்களையும் விவேகத்துடன் நிர்வகித்து வருகின்றது.

தற்போது உலக நாடுகள் எல்லாம் பணவீக்கத்தை எதிர்கொள்கின்றன. கனடாவின் பொருளாதார வளர்ச்சி ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது சிறப்பாக உள்ளது. ஆனாலும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை நாம் தொடர்ந்து கையாள வேண்டும். இதற்கு மத்திய அரசு வீட்டு வசதி மற்றும் குழந்தைப் பராமரிப்பு ஆகிய இரண்டு திட்டங்களை முன்னுரிமையாக்கிச் செயற்படுகிறது.

இதற்கு முதலாவதாக "வீட்டு வசதி ஊக்குவிப்பு நிதி" ஒன்றை உருவாக்கி நகராட்சி மன்றங்களுக்கு மேலதி மனைகளைக் கட்டவும் அவற்றின் வீட்டுத் திட்டங்களை விரைவாக அமல்படுத்த உதவவும் வழிவகை செய்கிறது. முதல் முறை வீடு வாங்குபவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை (First-Time Home Buyer's Incentive) , முதற்தடவை வீடு வாங்குபவர்களின் செலவுகளைக் குறைத்தல் (Reducing closing cost), வாடகைக்கு இருந்து சொந்தமாக்குதல்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# மாவீரர் நாளில் படையினரின் அராஜகம்




கடந்த 28ஆம் திகதி பல்வேறு தடைகளுக்கு மத்தியில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. மாவீரர் துயிலும் இல்லங்களில் முன்னர் நடைபெற்றதைப் போன்று நிகழ்வுகள் இடம்பெறவில்லை எனினும், பொது இடங்கள், வீடுகள், நினைவுத் தூபிகள் அமைந்துள்ள இடங்களில் மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர் வாரம் தொடங்குவதற்கு முன்னரே வடக்கு கிழக்கில் பொலிஸாரும், இராணுவத்தினரும் மற்றும், புலனாய்வாளர்களும் நினைவேந்தல் நிகழ்வுகளை குழப்பும் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

வடக்கிலும் கிழக்கிலும் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தடை விதிக்குமாறு கோரி பொலிஸார் நீதிமன்றங்களை நாடியிருந்தனர். சில பிரதேசங்களில் நீதிமன்றங்கள் இந்தக் கோரிக்கையை நிராகரித்திருந்தன. ஆனாலும், அனைத்து பிரதேசங்களிலும் படையினரின் அத்து மீறல்கள் இருந்தன. பொது இடங்களில் சுடரேற்ற வந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கடற்கரையில் அஞ்சலி செலுத்த முற்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன் கைது செய்யப்பட்டார். இதன்போது அவர் தாக்கப்பட்டார். பீற்றர் இளஞ்செழியனின் மனைவியும் தாக்குதலுக்கு இலக்கானார்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட சில பகுதிகளில் வீடுகளுக்குள் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியவர்களையும் படையினர் அச்சுறுத்தியுள்ளனர். குறித்த வீடுகளுக்குள் அத்துமீறி புகுந்து அச்சுறுத்தியுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் பல இடங்களில் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். முள்ளிவாய்க்கால் பகுதியில் முல்லைத்தீவு பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வசந்திரன் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலில் அவர் இரத்தக் காயங்களுக்கு உள்ளானார். அவர் மீது நான்கு இராணுவத்தினர் இணைந்து மூர்க்கத்தனமாக தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.



முட்கம்பி சுற்றப்பட்ட பனை மட்டையில் அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. படுகாயமடைந்த நிலையில் ஊடகவியலாளர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

முள்ளிவாய்க்கால் பெயர்ப் பலகையை புகைப்படம் எடுத்தபோதே நான்கு இராணுவத்தினர் சேர்ந்து இவ்வாறு அவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தமிழர்களால் மாவீரர்கள் என்று கூறப்படுவோர் பயங்கரவாதிகள் என்றும், நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவர்களை நினைவுகூரவே முடியாது எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. அத்துடன், நினைவஞ்சலி செலுத்திய அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கூண்டோடு கைது செய்யப்படுவர் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சரான தினேஸ் குணவர்தன ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டை எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கண்டித்துள்ளமையினையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழர் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் ஆயுதப் படைகள் நடந்து கொண்ட விதம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் இராணுவ ஆட்சிக்கு இதுவொரு சிறந்த எடுத்துக் காட்டு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

'வடக்கில் மக்களை மட்டுமல்ல ஊடகவியலாளரையும் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். அதேவேளை, சிலர் கைதுசெய்யப்பட்டும் உள்ளனர். இந்த அராஜக நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றோம். இறந்தவர்களை நினைவேந்த அனைவருக்கும் உரிமை உண்டு. இதில் இன, மத, மொழி வேறுபாடு காட்டக்கூடாது" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஊடகங்களிடம் தெரிவித்தார்.

'நாட்டில் தற்போது நடப்பது காட்டாட்சி என்பதை வடக்கு, கிழக்கில் 27ஆம் திகதி அரச படைகள் நடந்துகொண்ட விதம் எடுத்துக்காட்டுகின்றது. போரில் இறந்தோரை அமைதியாக நினைவேந்த



பல இடங்களில் நீதிமன்றமே அனுமதி வழங்கிய நிலையில் அதையும் மீறி இராணுவத்தினருடன் சேர்ந்து பொலிஸார் நடந்த கொண்ட விதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாட்டில் இன, மத, மொழி ரீதியில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் தமிழருக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவர்களை உள ரீதியில் மேலும் காயப்படுத்தக் கூடாது" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸ, ரணில் விக்ரமசிங்க,



மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோர் இணைந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மாவீரர் நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்படவில்லை. மாவீரர் துயிலும் இல்லங்களிலேயே மக்கள் அஞ்சலி செலுத்தக் கூடியதாக இருந்தது. நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்தவர்கள் மனப்பூர்வமாக மாவீரர் நினைவேந்தலை அங்கீகரிக்கா விட்டாலும் கண்டும் காணாத போக்கை கடைப்பிடித்தனர். ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்ற கொள்கையை வெளிப்படுத்தியிருந்த நிலையில், நல்லாட்சி அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்வது போல் நடந்து கொண்டது.

இன்றைய அரசாங்கம் எதனையும் பொருட்படுத்தாமலேயே அனைத்து விடயங்களிலும் நடந்து கொள்கின்றது. மக்கள் தங்கள் ஜனநாயக உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடும் நிலைக்கே நாட்டு மக்களை அரசாங்கம் நிர்ப்பந்தித்துள்ளது. தமிழ் மக்களும் தொடர்ந்து போராடும் நிலையிலேயே உள்ளனர்.

முல்லைத்தீவில் ஊடகவியலாளர் ஒருவர் மீலேச்சத்தனமாக படையினரால் தாக்கப்பட்ட விடயத்தை ஒரு சம்பவமாக கருதி விட்டுவிடக்கூடாது. இந்த சம்பவத்திற்கு எதிராக வடக்கு கிழக்கு மக்களும், ஊடக அமைப்புக்களும், ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும். தென்னிலங்கையிலுள்ள ஊடக அமைப்புக்களையும் இதில் இணைத்துக் கொள்ள வேண்டும். சர்வதேசத்திற்கும் இந்த ஜனநாயக மீறலைக் கொண்டுசெல்ல வேண்டும்.

விளம்பரம்
VLAMBARAM

31ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## உனக்குள்ளே முத்துக்கள்

ஏன் இந்தத்
தாழ்வுணர்ச்சி இளைஞனே!
வல்லவனைக் கண்டால் - ஏன்
புல்லாகக் குறுகுகிறாய்?
கல்லைப்போல் உறுதியாக இரு!
காவல் உனக்கில்லை!
மிதிப்பவருக்கே!

வளைந்தாலும்
வில்லைப் போல் வளை!
இலக்கை நோக்கி
அம்பெய்ய!

விழுந்தாலும்
அருவியைப் போல் விழு!
நதியாய் நடந்து
விவசாயம் செய்ய!
உப்பு நீரை வெளியேற்ற
கண்ணீர் ஒன்றுதானா வழி?
வியர்வை இல்லையா?
மனச்சுமை அதிகமானால்
கண்ணீர் சிந்தாதே!
இரட்டிப்பாக உழை!



யார் கண்டார்கள்?
இன்றைக்கு நீ சிந்தும்
வியர்வைத் துளிகள் யாவும்
சிப்பிக்குள் விழுந்த
மழைத்துளி போல்
நாளையே முத்தாகலாம்!

ஜெயராணி பூபாலசிங்கம்

# MORTGAGE & LINE OF CREDIT

MORTGAGE IN ANY SITUATION

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிறெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



ஜெ(Jey)இராசதுரை

MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage
& Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicanada.com

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

- ☆ Affidavits
- ☆ Certification of true copy
- ☆ Preparation and notary of Letter of Invitation
- ☆ Commissioning statutory declarations and solemn affirmations

- ☆ Small Claims
- ☆ Landlord & Tenant Matters

AAA Legal Services
AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**

(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students $20per sign

# நாமும் நமது இல்லமும் 596

## ஆதனம் வாங்குவதில் கூட்டு முயற்சி!



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கூட்டாக ஆதனம் வாங்குவது என்பது புதிதல்ல. ஆனால் அசாதாரண ஆதன விலை அதிகரிப்பு இவ்வாறான கூட்டு முயற்சிக்கு மேலும் உரம் பாய்ச்சுகிறது என்பது உண்மையே.

எமது மக்கள் 1980களின் இறுதிப் பகுதியில் இவ்வாறான கூட்டு முயற்சியில் ஈடுபட்டு இருந்தனர். இவ்வாறு கூட்டுச் சேர்ந்து வாங்கியதில் பலர் நன்மை அடைந்து இருந்தனர். எனினும் 1990களில் ஆதன விலையில் ஏற்பட்ட அதீத வீழ்ச்சி பலருக்குப் பலவிதமான கசப்பான உண்மைகளைத் தெரியப்படுத்தி இருந்ததை அறியக்கூடியதாக இருந்தது. எனினும் பின்பு நிலைமை மாறியது. ஆதனம் வாங்குவது என்பது நீண்டகால முதலீடு என்பதை மீண்டும் கனடிய மக்களுக்குத் தெரியப் படுத்தியுள்ளது. ஆனால் இன்றைய ஆதன விலை அதிகரிப்பு கூட்டாக ஆதனம் வாங்கும் எண்ணத்தை மக்கள் மத்தியில் மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

ரொறொன்ரோ மற்றும் வன்கூவர் போன்ற ஆதன விலை அதிகமாக உள்ள நகரங்களில் முதற்தடவை வீடு/மனை வாங்குவது என்பது இலகுவானதல்ல. இவர்களுக்கு ஒரு வித்தியாசமான முயற்சி தேவைப்படுகின்றது. அதுமட்டுமல்ல வெவ்வேறு வயதினர்களும் தமது வருமானம், சேமிப்பு போன்ற நிலைமைகளைக் கருதிற்கொண்டு இவ்வாறு ஒரு கூட்டாக ஆதனம் வாங்குவதைக் காணலாம்



Globe and Mail

இன்றைய காலத்தில் (2021) இவ்வாறான கூட்டு முயற்சிகள் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான கூட்டுச் சேர்ந்து ஆதனம் வாங்குவது என்பது ஒரு சாதாரண நடைமுறையாகவே வரலாம்.

கனடியப் புள்ளிவிபர அமைப்பினால் (Statistics Canada) அண்மையில் வெளியிட்ட புள்ளிவிவரங்களில், 15.3% ஆன முதற் தடவை ஆதனம் வாங்குவோர் மூன்று (3) அல்லது அதற்கு மேற்பட்டோர் சேர்ந்து கூட்டாக ஆதனம் வாங்கியது தெரிய வருகின்றது.

இவ்வாறாகக் கூட்டாகச் சேர்ந்து ஆதனம் வாங்கும் முறை சில சந்தர்ப்பங்களில் விரும்பத்தகாத சில நிகழ்வுகளை ஏற்படுத்தலாம் என்பதும் உண்மையே. இதனால் கூட்டாகச் சேர்ந்து ஆதனம் வாங்குவதற்கு முன்பாகவே வாங்கிய பிற்பாடு ஏற்படக்கூடிய பிரச்சினைகள், சிக்கல்களையும் பட்டியலிட்டு அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பதற்கான முன் நிபந்தனைகளையும் ஆவணப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

உதாரணமாக

1. கூட்டாக ஆதனம் வாங்கியோரில் ஒருவர் திருமணம் செய்தல்
2. மேலும் ஒருவரைக் கூட்டுச் சேர்த்தல்
3. கூட்டாக ஆதனம் வாங்கியோரில் ஒருவர் மரணமடைதல்
4. தவிர்க்க முடியாத நிலைமையில் கூட்டுச் சேர்ந்த ஒருவர் வெளியேறுதல்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் எவ்வாறு இம்முதலீடு கையாளப்பட வேண்டுமெனக் என ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

உதாரணமாக நாலு பேர் சேர்ந்து ஓர் ஆதனத்தை சமமான அளவிலான முதலீடு செய்து வாங்கும்போது ஒவ்வொருவருக்கும் 25% என்ற கணக்கில் உரிமை (ownership) கொள்ளப்படும். வெவ்வேறான அளவில் முதலீடு செய்தால் அதற்கேற்ப உரிமை கொள்ளப்படும்.

ஓர் உதாரணத்திற்கு நாலு பேர் சேர்ந்து சம அளவிலான முதலீடு செய்து வாங்கிய வீட்டில் ஒவ்வொருவரும் ஓர் அறையுடன் கூடிய குளியல் அறையை பாவிப்பதும், சமையலறையை நால்வரும் பொதுவாகப் பாவிப்பதாகவும், நிலக்கீழ் அறை (basement) பகுதியை உடற் பயிற்சிக்காக வைத்துக் கொள்வர். இம்முறையில் மொத்த செலவு நான்கு சம பங்காகப் பிரிக்கப்படும்.

அனுபவம் மிக்க ஆதன முகவர்களிடமும் சட்டத்தரணிகளிடமும் தகுந்த ஆலோசனைகளைப் பெறலாம். இவ்வாறான அணுகு முறை கூட்டாகச் சேர்ந்து வியாபாரம் செய்வது போன்றதாகக் கருதலாம்.


ஏற்கனவே கூட்டாக ஆதனம் வாங்குவோருக்குரிய Collaborative Home Ownership Development Initiative (CoHo) போன்ற சேவைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதனால் கூட்டாக ஆதனம் வாங்க விரும்புவோர் ஒன்றுசேருவோருக்கான பல சேவைகள் தொடங்கப்படும். உதாரணமாக விளம்பரம் பத்திரிகையின் குறிப்பாக வாடகை (Basement / Room for Rent) மற்றும் திருமண சேவை போலவே இவ்வாறான புதிய சேவைகளும் நடைமுறைக்கு வரும் என்பதும் இயற்கையே.

ஒரு சிலரின் அனுபவத்தில் ஓர் அறை கொண்ட அடுக்கு மனையில் வாடகைக்கு வாழ்வதைவிடக் குறைந்த செலவில் உரிமை கொண்ட வீட்டில் வாழலாம் என்பது தெரியவருகிறது. எனினும் அடமானக் கடன் பெறும்போது ஏற்படும் சிக்கல்கள் எவ்வாறு தீர்க்கப்படல் வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிலர் மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்கு இக்கூட்டு முயற்சிக்கு முதற்தடவை ஒப்பந்தம் இடுவதும், நீடிப்பதும், முற்றாக அதிலிருந்து விலகுவதும் அல்லது விலகுவதாகவும் கூட்டு முயற்சியில் வாங்குவதையும் காணலாம்.

இன்றைய நிலைமையில் கூட்டாகச் சேர்ந்து ஆதனம் வாங்குவது ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது. காலத்துடனான மாற்றங்கள் இம்முயற்சிக்குப் பலவிதமான புதிய திட்டங்களை, தகவல் களை உட்கொண்டு வருவதுடன் அரசின் கட்டுப்பாடும் ஏற்படலாம். இதனால் கூட்டுச் சேர்ந்து ஆதனம் வாங்குவது என்பது மக்கள் மத்தியில் பழக்கப்படும் என்பதே எனது கணிப்பு.






# உச்சக் கட்டத்தை அடைந்துள்ள பங்காளிக் கட்சிகளுடனான முரண்பாடு

**- விகிர்தன் -**

கோட்டாபய ராஜபக்ஸ தலைமையிலான இன்றைய அரசாங்கத்திற்கும், அதன் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்டு வரும் முரண்பாடானது, இப்போது அரசாங்கம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுடன் மேலதிகமாக தோற்றம் பெற்றுள்ள ஒரு சிக்கலாகவே அமைந்துள்ளது.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றோர் அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டே அரசாங்கத்தின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். அவர்கள் பொதுவெளியில் அரசாங்கத்தை விமர்சிப்பதானது உள்ளே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்து விட்டன என்பதையே காண்பிக்கின்றது.

இப்போது அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியாக உள்ள சிறீலங்கா சுதந்திர கட்சிக்கும் பொதுஜன பெரமுன கட்சிக்குமிடையே பாரிய முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அது நாளுக்கு நாள் அதிகரித்தும் வருகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத்தில் 14 உறுப்பினர்களை கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிட சிறீலங்கா சுதந்திரக் கட்சி இப்போதே தயாராகி வருவதாக தெரிகின்றது. பொதுஜன பெரமுன அரசாங்கம் தமது கட்சியை புறக்கணிப்பதாக அக்கட்சியில் உள்ள பலர் நீண்டகாலமாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை இலக்கு வைத்து அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சேறு பூசும் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இன்றைய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக இருப்பவருமான தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் சில நாட்களுக்கு முன்னர் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

ஆனால், பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் பொறுப்பு மிக்க தலைவர்கள் இந்த முரண்பாட்டை களைவதற்கான எவ்வித நடவடிக்கையினையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேனவிற்கும், பொதுஜன பெரமுனவின் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கும் இடையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மோதலானது, இரு கட்சிகளுக்கும் இடையிலான அரசியல் முரண்பாட்டின் உச்சக் கட்டமாக பார்க்கப்படுகின்றது.

தங்கள் கட்சியின் தலைவர் மீதான, தொடர்ச்சியான சேறுபூசல்களை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் வைத்து எச்சரித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் 3.5 பில்லியன் ரூபாயை செலவிட்டதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சுமத்தியுள்ளார். மைத்திரிபால சிறிசேன 200 வாகனங்களை பயன்படுத்தினார் என்றும் மஹிந்தானந்த கூறினார். இதேவேளை, அமைச்சர் ரோஹித அபே குணவர்த்தன 350 வாகனங்களை மைத்திரி பயன்படுத்தினார் என்கிறார். இதில் எது உண்மை? எனவும் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

14 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மீது தொடர்ந்து சேறுபூசுவதை தங்களால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.

தாங்கள் அரசாங்கத்தின் பங்காளிக்கட்சி என்ற வகையில் ஒவ்வொரு தடவையும் அரசாங்கத்தை பாதுகாத்து வருவதாகவும், அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் பேச்சுக்களை கட்டுப்படுத்த ஆளுந் தரப்பினர் நடவடிக்கை எடுக்காவிட்டால் தாங்கள் தொடர்ந்தும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு வாக்கெடுப்பு இடம் பெறவுள்ள நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு ஆதரவளிக்க வேண்டுமா என்பது தொடர்பில் கட்சிக்குள் ஆராயப்பட்டு வருவதாகவும், அடுத்த வாரம் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், நடைபெறவுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகவும் அக்கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படும் நோக்கில்



காய் நகர்த்தல்களை சுதந்திரக் கட்சி முன்னெடுத்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

நல்லாட்சியில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இறுதிக் கட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அவருக்கும் இடையில் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டபோது, சஜித் பிரேமதாஸவுடன் மட்டும் நல்லவிதமான தொடர்புகள் அவருக்கு இருந்தமை நினைவு கொள்ளத்தக்கது. எனவே, மைத்திரி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட தீர்மானம் எடுத்தால் அது சாதகமாகவே அமையும்.


நாட்டில் நாளுக்கு நாள் உயர்வடைந்து கொண்டிருக்கும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளால் பொதுமக்கள் அதிக பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் கோட்டாபய ராஜபக்ஸவிற்கு வாக்களித்த மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களுமே இந்த அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்துள்ளனர்.


தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உரப்பசளை தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் கொதிப்படைந்துள்ளனர். சேதனப் பசளையை அறிமுகப்படுத்துவதற்காக அவசரப்பட்டு இரசாயன பசளைகளுக்கான இறக்குமதியை தடை செய்த காரணத்தினால் எதிர்வரும் பெரும்போக நெல்செய்கை பாரிய பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது.

பெரும்போக விவசாயம் வீழ்ச்சியடைந்த காரணத்தினால் எதிர்வரும் காலங்களில் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறான சிக்கல்களை ஏற்படுத்தி விட்டு, நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறைய வேண்டுமானால் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத் தரப்பினர் கூறிக்கொண்டிருப்பது வேடிக்கையானதாகவே உள்ளது.

இந்த நிலையில் அவசரமாக ஓர் ஆட்சி மாற்றம் நாட்டில் ஏற்பட வேண்டும் என்கின்ற உணர்வு நாட்டு மக்களிடையே தோன்றியுள்ளது. மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமானால், ஒரு மாற்றத்தை உடனடியாகவே கண்டு கொள்ள முடியும்.

இந்த நிலையில், பொதுஜன பெரமுன அரசாங்கம் அதன் பங்காளிக் கட்சிகளுடன் மட்டுமல்லாது எதிர்க்கட்சிகளுடனும் கலந்தாலோசித்து மக்களுக்கான மாற்றுத் திட்டங்களை உருவாக்க வேண்டும். ஆனால், பங்காளிக் கட்சிகளையே பகைத்துக் கொண்டு தான்தோன்றித் தனமாக செயற்படுகின்ற நிலையில், அரசாங்கம் அதன் வீழ்ச்சியை நோக்கி மிக வேகமாக சரிந்து செல்வதையே காணமுடிகின்றது.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 78



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!

இன்று சில வீட்டு மருத்துவக் குறிப்புக் களைப் பற்றிக் கவனிப்போம். அன்றாடம் உடலில் ஏற்படும் சிறு சிறு பிரச்சினை களிலிருந்து நிவாரணம் பெற இயற்கை மருத்துவம் பெரிதும் உதவுகின்றது. இயன்றளவு வீட்டில் கிடைக்கும் உணவுப் பொருட்களே மருந்துப் பொருட்களாக மாறிவிடும். நமக்கு ஏற்படும் உடல் நலக் கோளாறுகள் தொடர்ந்து காணப்படுமானால் மருத்துவ உதவியை நாட வேண்டியது அவசியமாகின்றது. காலநிலை மாற்றம், கடுமையான உழைப்பு, சீரற்ற உணவு போன்றவற்றால் ஏற்படும் உபாதைகளுக்கு வீட்டு மருத்துவம் பெரிதும் உதவும்.

நெஞ்சில் சளி: நெஞ்சில் சளி ஏற்படும் பொழுது தேங்காய் எண்ணெய்யில் கற்பூரம் சேர்த்து நன்கு சூடாக்கி விட்டு பின்பு அதனை ஆறவைத்து நெஞ்சில் தடவி வர நெஞ்சில் உள்ள சளி குறைந்துவிடும்.

தொடர் விக்கல்: தொடர்ந்து விக்கல் இருக்குமானால் நெல்லிக்காயை அரைத்துச் சாறாக்கித் தேனுடன் கலந்து உண்டு வந்தால் விக்கல் குணமாகும்.

வயிற்று வலி: வெந்தயத்தை நெய்யில் வறுத்து அதனைப் பொடிசெய்து பின்பு மோருடன் கலந்து குடித்து வந்தால் வயிற்றுவலி குறையும்.

மூக்கடைப்பு: ஒரு துண்டு சுக்கை எடுத்து தோல் நீக்கி அரை லிற்றர் நீரில் போட்டுக் காய்ச்சி பால், சர்க்கரை சேர்த்து நாளொன்றுக்கு இரண்டு தடவை குடித்து வர மூக்கடைப்பு நீங்கும்.

வாய்ப்புண்: தலையிலும் எள்ளெண்ணெய் வைத்துக் கொள்வதோடு வாயிலும் எள் எண்ணெய் விட்டுச் சற்று நேரம் வைத்துக் கொப்பளித்துக் கொண்டு வந்தால் வாய்ப்புண் நீங்கும்.

வயிற்றுப் புண் மற்றும் வாயுத்தொல்லை: உலர்ந்த வேப்பம் பூவைத் தூளாக்கி வெந்நீரில் போட்டு விழுங்கி வர வயிற்றுப் புண் மற்றும் வாயுத்தொல்லை போன்ற பிரச்சினைகளிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

தொண்டை கரகரப்பு: சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை வறுத்துப் பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட்டு வரத் தொண்டைக் கரகரப்பு நீங்கும்.

இருமல்: முளைக்கீரை, அதிமதுரம் ஒரு துண்டு, மூன்று சிட்டிகை மஞ்சள் ஆகியன சேர்த்துக் கசாயம் செய்து குடித்து வர இருமல் குறையும்.

வெந்தயக்கீரை, உலர்ந்த திராட்சை பத்து, அரை மேசைக்கரண்டி சீரகம் ஆகியவற்றைச் சேர்த்துக் கசாயம் செய்து குடித்துவர இருமல் குறையும்.



பித்த வாந்தி, சமிபாட்டுக் கோளாறு: கறிவேப்பிலை, புளி, வறுத்த உப்பு, வறுத்து மிளகாய் ஆகியவற்றைச் சேர்த்துத் துவையல் செய்து சாப்பிட்டால் பித்த வாந்தி, சமிபாட்டுக் கோளாறு ஆகியவை நீங்கும்.

சாதுவான இதய வலி: சாதுவான இதய வலி ஏற்படும் பொழுது கொத்தமல்லிச் சாறு, பூண்டுச் சாறு, வெங்காயச் சாறு மூன்றினையும் சமவளவில் எடுத்துத் தேன் சேர்த்துக் கொதிக்க வைத்து இறக்கித் தினமும் காலையும், மாலையும், 30 மில்லி லீற்றர் குடித்து வந்தால் நிவாரணம் கிடைக்கும்.

இரத்த அழுத்தம்: முருங்கைக் கீரைச் சாற்றில் சீரகத்தை ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி காலையும், மாலையும் இரண்டு கிராம் தேனில் கலந்து சாப்பிட்டால் இரத்த அழுத்தம் சீராகும்.

இரத்தம் சுத்திகரிப்பு : வெந்தயக் கீரை யுடன் வாழைப்பூ, மிளகு ஆகியவற்றைச் சேர்த்து கசாயம் செய்து குடித்தால் இரத்தம் சுத்திகரிக்கப்படும். தோல் வியாதிகளும் குணமாகும்.

புதினா இலை, வேப்பம் இலை ஆகிய வற்றைச் சமவளவில் கலந்து அரைத்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் இரத்தம் தூய்மை யாகும்.

உடல் சூடு: வெந்தயக் கீரையுடன் பூண்டு, உப்பு சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் உடல் சூடு குறையும்.

கொத்தமல்லியை ஒரு கைப்பிடி அளவு எடுத்து நன்கு மென்று உண்டால் உடலின் சூடு குறையும்.

முருங்கைக் கீரையை அரைத்துத் தலையில் தேய்த்துக் குளித்தால் உடற் சூடு குறையும். தலையில் உள்ள பொடுகும் நீங்கும்.

கட்டி: கொத்தமல்லியை நல்லெண்ணெய் சேர்த்து வதக்கி உடலில் ஏற்படும் வீக்கம், கட்டிகள் மேல் வைத்துக் கட்டிவிட அவை சீக்கிரம் கரைந்து போகும் அல்லது அவை பழுத்து உடைந்து புண் விரைவில் காய்ந்து விடும்.

கண்கள் அழகும், ஒளியும் பெற: ஆப்பிள் பழத்தை தேனில் நனைத்துத் தொடர்ந்து சாப்பிட்டு வர கண்களும் ஒளி பெறு வதோடு அழகாகவும் வரும்.

கண்நோய்: பொன்னாங்கண்ணிக் கீரையை நெய்விட்டு வதக்கி ஆறியபின்பு கண்கள் மீது வைத்துக் கட்டி விட்டால் கண்நோய் சுகமாகும்.

காதுநோய்: தூதுவளைக் கீரையைக் காயவைத்துப் பொடியாக்கித் தினமும் சாப்பிட்டால் காது தொடர்பான நோய்களிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

முடக்கத்தான் கீரைச்சாற்றில் சில துளியைக் காதில் விட்டால் காது வலி நீங்கும்.

காதுக்குள் பூச்சி போனால் கால் அவுன்ஸ் நீரில் அரை அவுன்ஸ் உப்பு போட்டுக் கரைத்து எடுத்து காதில் சிறிதளவு விட்டால் பூச்சி வெளியே வந்துவிடும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

**இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.**

காயம்: அகத்திக்கீரையை அரைத்து ஆறாத நாள்பட்ட காயங்களில் தடவிவர அவை ஆறிவிடும்

ஆண்மை: சுக்குக்கீரைச்சாற்றில் முந்திரிப் பருப்பை ஊறவைத்து அரைத்துச் சாப்பிட்டால் ஆண்மை அதிகரிக்கும்.

பொன்னாங்கண்ணிக் கீரையுடன் மிளகு, வெங்காயம் ஆகியவற்றுடன் சிறிது உப்புச் சேர்த்து சமைத்துச் சாப்பிட்டு வர ஆண்மை அதிகரிக்கும்.

இரத்த ஓட்டம்: தூதுவளைக் கீரையை பூண்டு சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் இரத்த ஓட்டம் சீராகும்.

கல்லீரல் நோய்கள் : பொன்னாங்கண்ணிக் கீரையில் சூப் செய்து குடிப்பது கல்லீரல் கோளாறுகளுக்கு நல்லது.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)



# கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் இயல்விருது விழா

2021ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கும் விருது விழா எதிர் வரும் டிசெம்பர் 04, 2021 சனிக்கிழமை கனடிய நேரம் காலை 10:00 மணிக்கு மெய்நிகர் ஊடாக நிகழ்த்தப்பட இருக்கிறது.

2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ் இலக்கியத்தோட்டம் உலகெங்கும் பரந்திருக்கும் தமிழை வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. அரிய தமிழ் நூல்களை மீள்பதிப்பு செய்வது, தமிழ், ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பை உக்குவிப்பது, மாணவர் கல்விக்கு புலமைப் பரிசில் வழங்குவது, தமிழ் பட்டறைகளை ஒழுங்குசெய்வது, நூலகங் களுக்கு இலவசமாக தமிழ் நூல்களை வழங்குவது போன்ற சேவைகளை செய்து வருகிறது. தமிழ் படைப்பாளிகளுக்கும் பணியாளர்களுக்கு அவர்களை இனங் கண்டு வருடாவருடம் தமிழ் இலக்கிய வாழ்நாள் சேவையாளர், புனைவு, அபுனைவு, கவிதை, தமிழ் தகவல் தொழில்நுட்பம், மொழிபெயர்ப்பு போன்ற துறைகளில் பரிசுசிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது.

இவ் ஆண்டு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனைக்கான இயல் விருது மதுரை நாடாளுமன்ற உறுப்பினர், சாகித்திய அக்கடமி விருது பெற்ற எழுத்தாளர் வீர யுக நாயகன் வேள்பாரி நாவலாசிரியர் சு. வெங்கடேசன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும் கவிதைப் பிரிவில் கும்ப கோணத்தைச் சேர்ந்த தமிழ் நவீன கவிஞரும் எழுத்தாளருமான பெருந் தேவிக்கு அவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் நியூயோர்க்கில் அமைந்துள்ள சியானா (Siyane) கல்லூரியில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

புனைவு இலக்கிய விருது ´இடபம்´ நாவலாசிரியர் பா. கண்மணி அவர்கள் பெறவுள்ளார். இவர் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறுகதைகளும் குறுநாவல்களும் எழுதியுள்ளார்.

தமிழ் இலக்கிய சாதனை சிறப்பு விருது ´தாய்வீடு´ மாத இதழின் பிரதம ஆசிரியர் பி.ஜெ. டிலிப்குமார் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கருத்தரங்குகள், சிறுகதை, கவிதைப் போட்டிகள் மூலம் தமிழ் வளர்ச்சிக்காக உழைத்து வருபவர். இவரது தனி நடிப்பாற்றல் நாடக அரங்கங்கங்களில் பேசப்பொருளாகும்.

தமிழ்த் தொண்டு விருது இலங்கையைச் சேர்ந்த வீரகத்தி சுதர்ஷன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. யாழ்ப்பாணம் நெல்லியடி, கரவெட்டியில் பிறந்த இவர் கல்விமானி, முதுமானி பட்டங்களைப் பெற்று ஆசிரியராகப் பணியாற்றி தற்போது ஹாட்லி கல்லூரி துணை அதிபராகப் பணியாற்றுகிறார்.

# இன்னல்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

குடற்புண்: வெந்தயக்கீரையை உழுந்துடன் சேர்த்துக் கசாயம் செய்து சாப்பிட்டால் குடற்புண் குணமாகும்.

உலர்ந்த பிரண்டை இலை 100 கிராம், சுக்கு 10 கிராம், மிளகு 10 கிராம் ஆகிய வற்றுடன் சேர்த்துப் பொடியாக்கி தினமும் காலையில் 2 கிராம் சாப்பிட்டால் குடற்புண், தொண்டைப்புண் ஆகியவை குணமாகும்.

குழந்தை வளர்ச்சி: முளைக்கீரையைத் தொடர்ந்து 40 நாட்களுக்குக் குழந்தை களுக் குக் கொடுத்தால் உயரமாக வளர்வர்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள்.



மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். (தொடரும்)

உலகில் மிகப்பெரிய செல்வம் 'உடல் ஆரோக்கியம்"
மிகப்பெரிய சொத்து 'அறிவு'
மிகவும் அவசியமானது 'தன்னம்பிக்கை'
மிகச்சிறந்த ஆயுதம் 'பொறுமை'
மிகச்சிறந்த மருந்து 'சிரிப்பு'



# கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வருடாந்த விருது விழா

தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வருடாந்த விருது வழங்கும் விழா, இந்த வருடம் மெய்நிகர் வழியாக நடைபெறவுள்ளது.

## முதன்மை விருந்தினர்கள்



மதுரை நாடாளுமன்ற உறுப்பினர், சாகித்ய அக்கடமி விருது பெற்ற எழுத்தாளர் வீர யுக நாயகன் வேள்பாரி நாவலாசிரியர்
**சு.வெங்கடேசன்**



பிரபல நடிகர், ஓவியர், எழுத்தாளர், பேச்சாளர்
**சிவகுமார்**



கவிஞர், எழுத்தாளர், பாடகர், ஆவணப்பட இயக்குநர்
**ரவி சுப்பிரமணியன்**

நாள்: டிசம்பர் 04 2021
நேரம்: காலை 10 மணி (கனடா, அமெரிக்கா) மாலை 8.30 (இலங்கை, இந்தியா)

**Zoom Meeting** வழியாகவும், தமிழ் இலக்கியத் தோட்டத்தின் முகப்புத்தக வாயிலாகவும் இந்த விருது வழங்கும் நிகழ்வை நேரடியாகப் பார்க்கலாம்.

zoom **Meeting ID: 811 4968 3360**
**Passcode: 078782**

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!

தொடர்புகளுக்கு
647-501-6293
416-905-4000

www.facebook.com/tamilliterarygarden

# எம்.ஜி.ஆர். சொந்த வீடு வாங்கிய கதை

**துரை கருணா**

'நாம் தமிழர் கட்சி' தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, "என்னிடம் இன்றும் கேட்கிறார்கள்.. உனக்கு என்ன வருமானம் வருகிறது, எப்படி சாப்பிடுகிறாய் என? ஒவ்வொருவரிடம் பணம் பெற்றுக்கொண்டுதான் செலவு செய்கிறேன். இவ்வளவு பெரிய வீடுகளை கட்டி வாழ்கிறீர்களே... எனக்கு சொந்தமாக வீடே இல்லை; நாட்டையே அடைய துடிக்கிற எனக்கு வாழ்வதற்கு வீடில்லை என்பது வரலாற்றில் எவ்வளவு பெரிய துயரம்" என்று பேசியிருந்தார். இது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

தமிழ்நாட்டை ஆண்ட காமராஜர், அண்ணாதுரை, கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரும்கூட ஆரம்ப காலத்தில் சென்னையில் சொந்தமாக ஒரு வீடில்லாமல் வாடகை வீட்டில்தான் வாழ்ந்திருக்கின்றனர். அதிலும் தமிழ்நாடு முழுவதும் ஏழை - பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைத்து தரப்பு மக்களின் இதயங்களிலும் குடியிருந்த எம்.ஜி.ஆருக்கு சொந்த வீடு என்பது ஆரம்பகட்டத்தில் பெரும் போராட்டமாகவே இருந்திருக்கிறது.

இதுபற்றி இங்கே நம்முடன் பகிர்ந்து கொள்கிறார், தமிழ்நாட்டின் மூத்த பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான துரை கருணா....

"1930களில் சென்னை வந்த எம்.ஜி.ஆருக்கு சுமார் 20 ஆண்டுகள் கழித்துத்தான் 'சொந்த வீடு' என்ற கனவு நிறைவேறியது. ஆம், 1953ஆம் ஆண்டுதான் சென்னையிலுள்ள இன்றைய அவ்வை சண்முகம் சாலை எனும் லாயிட்ஸ் ரோடு பகுதியில் இருந்த 'தாய் வீட்டை' தமக்கு சொந்தமாக்கினார். இந்த வீடு வாங்குவதற்கு அவர் பட்ட சிரமமும் வீட்டின் சொந்தக்காரரான அந்நாளைய பிரபல வழக்கறிஞர் வி.பி. ராமனின் (நடிகர் மோகனின் தந்தை) பெருந்தன்மையும் சிலிர்ப்பூட்டும் சம்பவங்களாகும்.

வி.பி. ராமனும் எம்.ஜி.ஆரும் திமுகவில் தீவிரமாக செயலாற்றி வந்தவர்கள். அந்த அடிப்படையில் இருவருக்கும் பரஸ்பர நட்பு உண்டு.

அப்போது எம்.ஜி.ஆர்., தானும் அன்னை சத்யாவும் அண்ணன் சக்ரபாணியும் வாழ்வதற்காக வாடகைக்கு வீடு தேடிக் கொண்டிருந்தார். வி.பி. ராமனை சந்தித்த ஒரு பொழுதில், 'வாடகைக்கு வீடு வேண்டும்' என்று எம்.ஜி.ஆர். கேட்டிருக்கிறார். உடனே ராமன், 'வாடகைக்கு எதற்கு? எங்களுக்குச் சொந்தமான இன்னொரு வீட்டில் தங்கலாமே' என்று சொல்லியிருக்கிறார். எம்.ஜி.ஆரைப் பற்றி ஓரளவு அறிந்திருந்த ராமன், நொடியும் யோசிக்காமல், "வாடகைக்கு ஏன் பார்க்கணும்? வீட்டையே விலைக்கு வாங்கிக் கிட்டா நல்லதாச்சே' என்றிருக்கிறார்.

திரைத்துறையில் எம்.ஜி. ராமச்சந்திரன் அப்போதுதான் பிறைசந்திரனாக வளர்ந்து பிரகாசிக்கத் தொடங்கிய தருணம். 'சொந்தமாக வீடு வாங்கும் அளவிற்கு பொருளாதார நிலை இப்போது எனக்கு இல்லை' என்பதை மறைக்காமல் பெரியவரிடம் கூறியிருக்கிறார் எம்.ஜி.ஆர். அந்த இடத்தில்தான் அன்பும் கருணையும் அளவிட இயலாத பெருந்தன்மையும் அந்தப் பெரியவர் ஏ.வி. ராமனின் உருவத்தில் குடிகொண்டு பேசியது இப்படி: 'மனசார சொல்கிறேன் சந்திரா (ராமச்சந்திரன்). மறுபேச்சு பேசாமல் ஒப்புக்கொள். எனக்கு இருப்பது ஒரு மகன், அவனுக்கு ஏற்கனவே இருக்கிற ஒரு வீடு போதும். நீயும் எனக்கு இன்னொரு மகன்தான். தவணை முறையில் பணம் கொடுத்தோ அல்லது உனக்கு கைநிறைய வருமானம் வரும்போதோ இப்போது நீ தங்கப்போகும் இந்த வீட்டை உனக்கென்று சொந்தமாக்கிக்கொள். வீட்டுக்கான விலை இதுதான் (என்று ஒரு தொகையைச் சொல்லி) உடனே குடும்பத்துடன் வந்து குடியேறு" என்று அன்புக் கட்டளையே போட்டுவிட, அப்படியே நெக்குருகிப்போய் கைகள் குவித்து பெரியவரை வணங்கியுள்ளார் எம்.ஜி.ஆர்.

பின்னாளில் அந்த இல்லத்தில்தான் 'எம்.ஜி.ஆர் பிக்ஸர்ஸ்' நிறுவனம் தொடங்கப்பட்டது. முதல் தயாரிப்பாக 'நாடோடி மன்னன்' படம் தயாரிக்கப்பட்டு, வசூலில் சக்கைபோடு போட்டதும் எம்.ஜி.ஆர். அந்த வீட்டை சொந்தமாக வாங்கியதும் அந்த வீட்டுக்கு 'தாய் வீடு' என்று பெயர் சூட்டியதும் எம்.ஜி.ஆர். சரித்திரத்தின் கல்வெட்டு சாட்சிகள்.

வாங்கிய வீட்டை புத்தம்புதிய வீடாக்கிய எம்.ஜி.ஆர்., மறக்காமல் மனம் நெகிழ வைக்கும் ஒரு காரியத்தைச் செய்தார். அந்த வீட்டின் திறப்பு விழாவின்போது, வீட்டுக்கு விளக்கேற்றி வைத்து தங்களை ஆசிர்வதிக்க வேணும் என அவர் அழைத்தது _ அதே வீட்டுக்குச் சொந்தக்காரரான பெரியவர் வழக்கறிஞர் ராமனைத்தான்.



வாழ்த்திய பெரியவர் ராமனின் பாதம் பணிந்து எம்.ஜி.ஆர். வணங்க, அப்போது அன்னை சத்யா, 'நமது குடும்பத்தினர் மீது இவ்வளவு அன்பும் அக்கறையும் வைத்திருக்கிற இவரை நீங்கள் இருவரும் மறக்கவே கூடாது' என்று இரண்டு மகன்களிடமும் நெகிழ்ந்துபோய் சொல்லி இருக்கிறார்.

தாய் சொல்லைத் தட்டாத தனயன்களும் வி.பி. ராமன் குடும்பத்தினரை தங்களது குடும்பத்தினரைப் போலவே காலத்துக்கும் மதித்துவந்தனர்.

உழைத்துச் சம்பாதித்த பணத்தை சேமிக்க வேண்டும், சொத்துக்கள் வாங்கி குவிக்க வேண்டும் என்ற எண்ணம் எம்.ஜி.ஆருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. தாம் சம்பாதித்த பணத்தில் பாதிக்கு மேல், நன்கொடையாக, உதவிகளாக வாரிவாரி வழங்கினார் என்பது வரலாறு. அவரோடு இருந்தவர்களும் அவரது உதவியாளர்களும் தெரிவித்து வரும் தகவல்கள் இன்றளவும் அதற்கான நேரடி சாட்சிகள் என்பது கண்கூடு.



இரக்க குணமும் வள்ளல் தன்மையும் எம்.ஜி.ஆரிடம் பிறவிச் சொத்தாக குடிகொண்டிருந்தது என்பதை எவராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியுமா!

இந்நிலையில், பின்னாளில் ராமாவரம் தோட்டத்தில் எம்.ஜி.ஆர். புதிய வீடு கட்டும்போது, ஒரு நிலவறை அமைத்தார். பிரதான வீட்டின் அருகே ஓர் அறைக்குக் கீழாக இருந்தது இந்த நிலவறை. அப்போது இதுபற்றி தகவல் அறிந்த பலர், 'எம்.ஜி.ஆர். கருப்புப் பணத்தை பதுக்கி வைக்கவே இப்படி பூமிக்கு அடியில் ரகசிய அறை கட்டியிருக்கிறார்' என்றெல்லாம் கிசுகிசுத்தனர்.



ஒருமுறை, சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானத்தை அந்த நிலவறைக்கு எம்.ஜி.ஆர். அழைத்துச் சென்று காட்ட, தமிழறிஞரும் புத்தகப் பிரியருமான ம.பொ.சி. அப்படியே ஆனந்த அதிர்ச்சியில் உறைந்துவிட்டார். அந்த அறைக்குள், சுவர் முழுக்க அலமாரிகள், அதில் ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் அடுக்கடுக்காக இருந்துள்ளன.

இன்னொருமுறை - இந்த நிலவறைக்கு வந்து பார்த்த பிரபல வழக்கறிஞரும் எம்.ஜி.ஆரின் மிக நெருங்கிய குடும்ப நண்பருமான வி.பி. ராமன், 'ஆச்சரியமா இருக்கே, இவ்வளவு புத்தகங்களை இங்கே ஏன் அடுக்கி வச்சிருக்கீங்க' என்று கேட்டுள்ளார்.

அதற்கு எம்.ஜி.ஆர்., 'இது ரொம்ப நாள் ஆசை, உங்களைப் பார்க்க நான் வரும் போதெல்லாம் நீங்கள் புத்தகங்களின் நடுவில்தான் உட்கார்ந்திருப்பீர்கள். அப்படித்தான் நானும் புத்தகங்களின் நடுவே உட்கார ஆசைப்பட்டேன். உங்களைச் சுற்றி சட்டப் புத்தகங்கள் இருக்கும். என்னைச் சுற்றி காவியம் தத்துவம், கவிதை, கதைகள் என இருக்கின்றன' என்று புன்னகைத்தாராம்'."

## சிறக்க வாழ்ந்திட!



மதுவைநீ நாடாதே மதிகெட்டுப் போயிடுவாய்
மங்கையரை நாடுவதால் வலியுனக்கு வந்துவிடும்
சதிசெய்யும் குணமுடையார் சகவாசம் தனைவிடுத்தால்
சரியான வழிநடக்கத் தானாகப் பழகிடுவாய்!

ஏழ்மைநிலை இருப்பாரை இரக்கமுடன் அணைத்துவிடு
எதிரியென எவரையுமே என்றும்நீ எண்ணாதே
சோதனைகள் வந்திடினும் சோர்ந்துவிடா இருந்துவிடின்
சாதனையின் நாயகனாய் தலைநிமிர நின்றிடுவாய்!

அறத்தினைநினை அன்பையணை
சிரத்தையுடன்நீ சிறந்தனதேர்ந்திடு
இறப்பினைப்பற்றி எண்ணாதிருந்திடு
சிறக்கவாழ்ந்திட சிந்தனைசெய்திடு!

அரக்ககுணத்தை அடியோடழித்திடு
உரக்கவுண்மையை வாழ்வினிலுரைத்திடு
குறைக்குள்சென்றிடா மனத்தைத்தடுத்திடு
சிறக்கவாழ்ந்திடச் சிந்தையைசெலுத்திடு!

தாழ்வுமனப்பான்மையினை தானழித்துநில்லு
வீழ்கின்றஎண்ணம்வரின் விரட்டியேகொல்லு
ஆர்வந்துஎதிர்த்தாலும் அன்புவழிநில்லு
அகிலமதிலுன்வாழ்வு அர்த்தமுடனமையும்!



**எம். ஜெயராமசர்மா**
மெல்பேண் அவுஸ்திரேலியா

# புதுச்சேரி அரசியல் போராட்ட வரலாறு – நூல் அறிமுகம்

- தளவாய் சுந்தரம் -

பாண்டிச்சேரி என்றாலே, தமிழர் பெரும்பாலானோருக்கு மதுதான் நினைவுக்கு வரும். தமிழ்நாட்டில் நடைபெறும் மது விலக்குப் போராட்டங்கள் அனைத்திலும் கூடப் பாண்டிச்சேரி பெயர் தவறாமல் அடிபடும். ஆனால், இது பாண்டிச்சேரியின் ஒரு முகம்தான். அதன் இன்னொரு முகம், இரண்டாயிரம் ஆண்டுகள் செழுமையான வரலாறும் பண்பாடும் கொண்டது. அரவிந்தர், அனந்தரங்கம் பிள்ளை, பாரதியார், பாரதிதாசன், வ.வே.சு. ஐயர் எனப் பல தமிழ் ஆளுமை களைப் பெற்றடுத்து / அரவணைத்து ஆதரித்த மண்ணாக மிகச் சமீபகால வரலாறுகளில்கூடப் பாண்டிச்சேரி பெருமை யுடன் இடம்பெறுகிறது. 'பேரமைதியின் பிறப்பிடம்' என்று பாண்டிச்சேரியைச் சொல்கிறார் அரவிந்தர். இந்த இரண்டு முகங்கள் தவிர இன்னொரு முகமும் பாண்டிச்சேரிக்கு இருக்கிறது. அந்த மூன்றாவது முகம், 'காலம், புதுவையை உராய்ந்து அல்லது இடித்து நகர்த்தும் போதெல்லாம், சிலிர்த்து எழும். ஒரு புதிய வரலாற்றை உருவாக்கும்" என்பார், புதுச்சேரி தந்த எழுத்தாளர் பிரபஞ்சன். அப்படி, சிலிர்ந்தெழுந்து புதுச்சேரி உருவாக்கிய ஒரு சமீப கால வரலாற்றைப் பதிவு செய்கிறது இந்தப் புத்தகம்.

தமிழ்நாட்டிலும் புதுச்சேரியிலும் தமிழர்தான் வாழ்கின்றனர் என்றாலும், தமிழ்நாட்டு வரலாற்றுக்குள் புதைந்துவிடாத, தனித்துவமான வரலாறும் பண்பாட்டுச் செழுமைகளும் கொண்டது, புதுச்சேரி. அதன் மிகத் தொன்மையான வரலாறு 2ஆம் நூற்றாண்டில் இருந்தே தொடங்குகிறது. அக்கால உரோம மாலுமிகளின் செலவுக் குறிப்பேடான 'செங்கடல் செலவு' என்னும் கையேட்டில், 'பொடுகெ' எனப் படும் சந்தை குறித்து உள்ளது. இந்த இடம் புதுச்சேரியிலிருந்து 2 கிமீ தொலைவில், தற்போது அரியாங்குப்பத் தின் பகுதியாக உள்ள, அரிக்கமேடுதான் அது. 1944இலிருந்து 1949வரை அரிக்கமேட்டில் நடைபெற்ற தொல்லியல் அகழ்வாய்வுகளில் ரோமானிய மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டன. இதன்மூலம், கி.பி. 1ஆம் நூற்றாண்டில் இந்த இடம் முக்கிய வணிக மையமாக விளங்கியது உறுதி செய்யப்பட்டது.


1673 பிப்ரவரி 4 முதல் புதுச்சேரி பிரெஞ்சுக்காரர் ஆட்சியின் கீழ் வந்தது. தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பெரும்பகுதி ஆங்கிலேயர்கள் ஆட்சியின் கீழ் இருந்தபோது, புதுச்சேரி மட்டும் பிரெஞ்சுக்காரர் கையில்தான் இருந்தது. ஆங்கிலேயர்கள் போல் வெறும் ஆட்சியாளர்களாகவும் வியாபாரிகளாகவும் இல்லாமல், புதுச்சேரி மக்களின் அன்றாட வாழ்வோடு பிரெஞ்சுக்காரர் நெருக்கமாக இணைந்திருந்ததன் விளைவு, பிரெஞ்ச் பண்பாட்டுடனும் வாழ்வியல் கூறுகளுடனும் உணர்வுபூர்வமாகப் பிணைக்கப்பட்டனர் புதுச்சேரி மக்கள். இது தமிழரிடயே புதுச்சேரிக்காரர்களின் தனிச் சிறப்புக்கு காரணம்.

